# மட்டக்களப்புத் தேசத்து வைஷ்ணவ சம்பிரதாயங்களும், சித்தாந்தங்களும் - கஞ்சன் அம்மானையினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

மேகலா சிவகுமாரன்[1], ச. முகுந்தன்[2]

## ஆய்வுச்சுருக்கம்:

*இந்து எனும் சட்டகத்தினுள் வைதிக சமயங்கள் அனைத்தும் இணைவு பெற்று விளங்குவது மட்டக்களப்புத் தேசத்து சமய மரபின் சிறப்பம்சமாகும். அம்மன், சிவன், முருகன், விஷ்ணு, குமாரர் என ஒவ்வோர் வழிபாடும் ஒவ்வொரு பண்பாட்டுத் தளத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இத்தேச வைஷ்ணவ மரபில் விஷ்ணு, திரௌபதை ஆலயங்கள் எண்ணிக்கையில் குறைவெனினும் அவ்வாலயச் சடங்குகள் தனித்துவமும் சிறப்பும் வாய்ந்தவை. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மட்டக்களப்புக் கலாசாரம் மகாபாரதக் கலாசாரம் என கூறுவதற்கமைய இத்தேசத்துக் கலை, இலக்கியங்கள் மகாபாரத கலாசாரப் பண்புகளைக் கொண்டவையாகத் திகழக்காணலாம். இங்குள்ள வைஷ்ணவ இலக்கியங்களின் வரிசையில் அம்மானைகள் தனித்துவம் பெறுகின்றன. அந்தவகையில் பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை, இராமர் அம்மானை என்பன கவனத்திற்குரியன. பகவானின் பூர்ணாவதாரங்களில் ஒன்றாக அமைவது ஸ்ரீகிருஷ்ண அவதாரமாகும். கண்ணனாகப் பிறந்து வளர்ந்து கஞ்சனை வதம் செய்வதைப் பற்றி எடுத்துரைப்பதே ''கஞ்சன் அம்மானை'' ஆகும். கஞ்சன் வதத்தினைப் பாடுபொருளாகக் கொண்ட இவ்வம்மானை மட்டக்களப்பு தேசத்து விஷ்ணு ஆலயங்களில் பூசிக்கப்படும் புனிதச் சின்னமாகவும், பூசைகளை நெறிப்படுத்தும் பனுவலாகவும் திகழ்கின்றது. இவ்வம்மானை சமய இலக்கியமாக மாத்திரமின்றி பொதுமக்கள் இலக்கியமாகவும் திகழும் சிறப்பிற்குரியது. மட்டக்களப்புத் தேசத்தின் வைஷ்ணவ சமயமரபின் முக்கிய பனுவலாகத் திகழும் இவ்வம்மானையினை மையப்படுத்திக் கட்டமைக்கப்பட்டுள்ள மட்டக்களப்புத் தேசத்து வைஷ்ணவ சம்பிரதாயங்களையும், அம்மானையில் இழையோடுகின்ற வைஷ்ணவ சித்தாந்தங்களையும் வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். சமய மரபிலும் தத்துவ மரபிலும் பன்மைத் தன்மையைக் கொண்டு துலங்குகின்ற இத்தேசத்து மரபில் வைஷ்ணவ சித்தாந்தத்தை அடையாளப்படுத்த முனைகின்ற இவ்வாய்வில் விபரண ஆய்வு முறையியலே அதிகம் கையாளப்படுகின்றது. அவசியமான இடங்களில் வரலாற்றியல் மற்றும் ஒப்பாய்வு முறையியல்களும் கையாளப்படுகின்றன. கஞ்சன் அம்மானையில் பேசப்படும் வைஷ்ணவ சித்தாந்தச்சார்புடைய ஈஸ்வரனின் பரத்துவம், வைணவ மரபில் ஈஸ்வரனுக்குக் குறிப்பிடப்படும் ஐந்து நிலைகளான பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன பற்றிய செய்திகள், வாசுதேவனின் வியூகங்கள் பற்றிய செய்திகள், ஈஸ்வரனின் மங்கல கல்யாண குணங்கள், சரீரசரீரி சம்பந்தம், பரிணாமவாதம், வினைகளில் இருந்து மீள்வதற்கான வழிகள், பொன்னுலகு எனப்படும் முக்திநிலை ஆகிய விடயங்கள் தொடர்பில் இக்கட்டுரை கருத்துக்களை முன்வைத்துள்ளது.*

**திறவுச்சொற்கள்:** அம்மானை, வைஷ்ணவம், மட்டக்களப்பு, மகாபாரதம், வைஷ்ணவ சித்தாந்தம்

[1]*இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.*
*mekala@esn.ac.lk*
*2இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*smuhunthan@univ.jfn.ac.lk*

**அறிமுகம்**

மட்டக்களப்பு தேசத்தின் பல்வேறு கிராமங்களில் நீண்டகாலமாக ஏட்டுவடிவில் வழங்கப்பட்டு வந்த இலக்கியமே கஞ்சன் அம்மானையாகும். பாகவத புராணக்கதையை சுருக்கமாகக் கூறுபவையே இவ்வம்மானை ஏடுகள். கஞ்சன் அம்மானை, அம்மானைப் பிரபந்தத்தைச் சேர்ந்த இலக்கியமாகும். அம்மானைப் பிரபந்தத்தின் வளர்ச்சியை தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலாக காணலாம். சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் வரும்

"இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்தும்
பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்....
குரவையும் வரியும்..." (சிலப்பதிகாரம்:அரங்கேற்றுகாதை வரி:13.)

இப்பாடல் வரிகளுக்கு அடியார்க்கு நல்லார் உரையில், கோத்த வரிக்கூத்தின் குலம் என 120இற்கும் மேற்பட்ட ஆடல், பாடல், விளையாட்டுக்களைக் குறிப்பிடுகின்றார். இவற்றில் அம்மானையும் குறிக்கப்பெற்றுள்ளது. மேற்படி வரிக்கூத்தின குலம் எனக் கூறப்பட்டவையில் கழங்கு, பல்லாங்குழி, கிள்ளுப்பிறாண்டி, குரவை என்பவை இன்றுவரை மட்டக்களப்பு பகுதியிலே வழக்கிலுள்ளன. அம்மானை பெண்கள் இசைப்பாடலுடன் விளையாடுகின்ற விளையாட்டாகத் திகழ்ந்துள்ளது. இது சிலம்புகள் என்கின்ற காய்களை வைத்துக்கொண்டு ஒன்றை மேலே வீசி அது திரும்புவதற்குள் மற்றொன்றை வீசி கீழே விழாமல் பிடித்து விளையாடுவதாகவும், சிலம்புக்கு பதிலாக அம்மானை என்கின்ற காய்களை வீசிப் பிடித்து பெண்கள் விளையாடுவதாகவும் மரபாய் விளங்கியுள்ளது. இலக்கியங்களிலுள்ள அம்மானைப் பாடல்களையும் பெண்களே வரிப்பாட்டாகப் பாடி ஆடினர் என்பர். திருவாசகத்திலே திருவம்மானைப் பகுதியில் இருபது அம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன. இவை இறைவனின் புகழைப்பாடி பெண்கள் அம்மானை ஆடும் செய்தியையே குறிப்பிடுகின்றன.

அம்மானை எனும் பதம் பெண்களுக்கான விளையாட்டை சுட்டுவது மட்டுமன்றி பெண் பிள்ளைப் பருவத்தைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளது. பிள்ளைத்தமிழ் பிரபந்த வகையில் பெண்பிள்ளைத் தமிழில் வரும் பருவங்களில் அம்மானைப் பருவமும் ஒன்று. இது எட்டாவது பருவமாக அமையும். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களில் பாட்டுடைத்தலைவியரை தாய்மாரும் செவிலியரும் அம்மானை ஆடும்படி சொல்வதாக அமையும் பாடல்கள் உள்ளன.

பிற்காலத்தில் அம்மானையானது தனிப்பிரபந்தங்களாக வளர்ச்சி கண்டது. இவற்றிற்கு அடிவரையறை இல்லை. இவை கிராமியப்பாடல்களின் பண்புகள் கொண்டவை. பேச்சு வழக்கு, எளிமையான உவமானங்களோடு அமைகின்றன. தமிழகத்திலே நாயக்கர் காலத்திலே

வீரதீரச் செயல்களைப் புரிந்த பொதுமக்களின் வரலாறுகளைத் தழுவி அம்மானைகள் தோற்றம் பெற்றுள்ளன. அடுத்தகட்டமாக சமயம்சார்ந்த கதைகளைத் தழுவியனவாகவும் அம்மானைகள் வளர்ச்சியடைந்தன.

இலங்கையில் கிழக்குப் பகுதியில் சமயம் சார்ந்த அம்மானை இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. மட்டக்களப்பு தேசத்தைப் பொறுத்தவரை அங்கு பயில் நிலையில் உள்ள அம்மானை ஏடுகளின் காலமோ, ஆசிரியரோ அறியப்படாத நிலையிலேயே உள்ளன. இத்தேசத்திற்கு காலத்திற்கு காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்த குடியேற்றங்கள் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திர ஏடுகள் குறிப்பிடுகின்றன. இத்தொடர்புகளால் சமயம் சார்ந்த அம்மானைகளின் செல்வாக்கு ஏற்பட்டிருக்கலாம். சான்றாக மட்டக்களப்பு மான்மியத்திலுள்ள தாதன் கல்வெட்டில் வரும் குறிப்பு பின்வருமாறு அமைகின்றது. மட்டக்களப்பை எதிர்மன சிங்கனும் கண்டியை விமலதரும சூரியனும் ஆட்சி செய்த காலத்தில் தாதன் என்பவன் கொங்கு நாட்டிலிருந்து மட்டக்களப்புத் திருக்கோயிலை வந்தடைந்தான் என்றும் அவன் எதிர்மன்ன சிங்கனிடம் தான் வந்த காரணத்தைக் கூறுமிடத்து,

''தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடனே ஓதுகின்றான்......
பாரதமென்றோர் மதத்தை......
அங்கங்கு சென்று அரியோன் அடியார்க்குக்
காட்டியபின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்கு
சூட நினைவு கொண்டு துளசி மணி மாலையிட்டு
வந்தேனெனது மரபிதென்ன.......'' (நடராசா,எப்.எக்ஸ்.சி.,1998:91)

எனக் குறிப்பிடுகின்றான். மேலும் மட்டக்களப்பு மான்மியத்தில் எதிர்மன்ன சிங்கன் சரித்திரம் எனும் வசனப்பகுதியில் ''மகாபாரத்தோடு சேர்த்துப் புலவர்கள் பாடிய இதிகாசத்தை மடலில் வரைந்தெடுத்துக் கொண்டு, மட்டக்களப்பு திருக்கோயிலைத் தெரிசனை செய்து, மகாபாரத இதிகாசத்தை அவ்வாலயத்தில போதித்தான்'' (நடராசா.எப்.எக்ஸ்.சி.,1998:65) எனவும் கூறப்படுகின்றது. இது பொதுவான கூற்றே, ஆயினும் இவ்வாறு வரைந்து கொண்டு வந்தவைகளின் வழியாக வைணவ அம்மானை இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருக்கலாம்.

வைணவ அம்மானை இலக்கியங்களாக பாரதக்கதையை அடியொட்டி பாரதஅம்மானை, கஞ்சன் அம்மானை, குருசேத்திர அம்மானை, வைகுந்த அம்மானை என்பனவும் இராமாயணத்தைக் கருவாகக் கொண்டு இராமன் அம்மானையும் இன்று வரை இத்தேசத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களில் பூசிப்பிற்குரியதாகவும், சடங்குகளை கட்டமைப்பற்கு அடிப்படையாயும் அமையும் இலக்கியமே கஞ்சன் அம்மானையாகும்.

**நூற்கட்டமைப்பு**

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் மட்டக்களப்பின் பல்வேறு இடங்களில் வழங்கி வந்த அம்மானை ஏடுகளில் திமிலைத்தீவு, தம்பிலுவில், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பெற்ற மூன்று ஏடுகள் ஒப்பிடப்பட்டு 1970ஆம் ஆண்டு பதிப்பு வடிவம் பெற்றதே கஞ்சன் அம்மானையாகும். பதிப்பாசிரியர் தனது பதிப்பிற்கு திமிலைத்தீவு ஏட்டினை மூலமாகக் கொண்டு அவ்வேட்டிலிருந்து ஏனைய இரு ஏடுகள் வேறுபடும் இடங்களையும் குறித்துக் காட்டியுள்ளார்.

இந்நூலானது கிருஷ்ண அவதாரத்தை அடிப்படையாகக் கொண்டு விநாயகர் காப்பு, வரலாறு, அவையடக்கம், கதை, கிருஷ்ணன் அவதாரம், வாசுதேவன் கண்ணனை ஆயர்பாடிக்கு எடுத்துச் செல்லுதல், ஆயர்பாடியில் கண்ணன் வளர்தல், பூதனைவதம், சகடன் நிணபோசனன் வதம், மத்தன் மதாமத்தன் வதம், புட்கரன் வதம், கிறுத்துவன் பிறலம்பன் வதம், சுகந்தன் விகந்தன் வதம், கலை கவர்ந்தமை, காளிய நர்த்தனம், கூத்தரைக் கொல்லுதல், கோவர்த்தன மலையை குடையாய்ப் பிடித்தமை, குருந்தன் தேனுகன் வதம், சத்தவாலி வதமும் நப்பின்னை திருமணமும், கமலபத்திராட்டிக்கு வைகுந்தம் அளித்தல், விழமுரசன் சுந்தரன் வதம், கேசன் வெகுகோசன் வதம், குவலய பீடத்தைக் கொல்லுதல், முட்டிகன் சாணுகன் வதம், கஞ்சன் வதம், சந்துபலி காசியன் கதை, சராசந்தன் போர், துவாரகாபதி எடுத்தகதை, உருப்பிணி கல்யாணம், கறடியர்கோன் கதை, சத்தியபாவையை வேட்டமை, சதாசு யுத்தம், அனுருத்திரன் பிறதூமன் பிறந்த கதை, செம்பன் மதுகயிடவன் யுத்தம், நரகாசுரன் யுத்தம், இந்திரனையடக்கிப் பாரிசாதமும் கற்பகதருவும் பெற்றமை, வாணன் யுத்தம் முதலானவற்றை பாடுகின்ற பிரபந்தமாகத் திகழ்கின்றது.

கஞ்சன் அம்மானை என்ற பெயரில் கிருஷ்ணவதாரத்தைப் பாடிய ஆசிரியர் பெயரோ காலமோ அறியக்கிடைக்கவில்லை. மட்டக்களப்பு பேச்சுவழக்கு சொற்களை கையாண்டு பாடப்பட்ட இந்நூல் இப்பகுதியில் வாழ்ந்த புலவர் ஒருவரினால் இயற்றப்பட்டிருக்கலாம். ஆயினும் இப்பிரபந்தத்தில் ''பாலை வரு பிரமன் பாடுகிறேன் அம்மானை'' (கஞ்சன் அம்மானை:7) என்ற ஒரு தொடரும் அதனைத் தொடர்ந்து ''பண்பால் நிறைந்த பரராச மாமுனிவன் நண்பால் உரைத்தருளும் நாராயணன் கதையை'' என்ற அடிகளும் வருகின்றன. முன்பு பரராச முனிவர் கூறிய கதையை பிற்காலத்தில் பாலைவருபிரமன் அம்மானையாய்ப் பாடியதற்கு வேறு எந்த அகப் புறச்சான்றுகளும் இல்லை என இவ்வரிகளைக் கொண்டு விளக்கமளித்த பதிப்பாசிரியர் குறிப்பிடுகின்றார் (கஞ்சன் அம்மானை:XI).

**கஞ்சன் அம்மானையும் மட்டக்களப்பு விஷ்ணு கோயில் சம்பிரதாயங்களும்.**

நெய்தலும் மருதமும் முல்லையும் கலந்த நிலப்பரப்பாய் நீண்டு கிடப்பதே மட்டக்களப்பு தேசம். இத்தேச மக்களின் பொருள்வளம் நெற்செய்கையிலும், மந்தை வளர்ப்பிலும், மீன்பிடியிலும் தங்கியிருந்தது. மந்தை வளர்ப்போரின் தெய்வம் மாயோன். இத்தேசத்தாரும் மாயோனை வழிபடு தெய்வமாக நெடுங்காலம் முதலாக வழிபட்டுவருகின்றனர். அதன்வழி ஆங்காங்கு சில விஷ்ணு கோயில்களும் அமைந்துள்ளன. அவ்வகையில் திமிலைத்தீவு, வந்தாறுமூலை, பழுகாமம், காரைதீவு, தம்பிலுவில், குருக்கள்மடம், களுதாவளை விஷ்ணு கோயில்கள் பழமையானவை. இங்குள்ள விஷ்ணு கோயில்களை 'கிட்டிணன் கோயில்' என்றே அண்மைக்காலம் வரை அழைத்து வந்தனர். ''கிட்டிணன் எனும் சங்கதச் சொல்லின் கருத்து 'கறுப்பன்' என்பதாம் கண்ணனும் கரியநிறம் உடையவனாகக் காட்டப்படுகின்றான்''என A.L பசாம் குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது (பசாம்,A.L.,1963:421). இக்கிட்டிணன் கோயில்களின் சடங்கு நெறிமுறைகளோடு நெருங்கிய தொடர்புடையதாக கஞ்சன் அம்மானை திகழ்கின்றது.

மட்டக்களப்பு தேசத்தில் பத்ததிசார் சடங்கு வழிபாடே முதன்மையானது. ஆரம்பகாலங்களில் வருடத்தில் ஒரு முறை கதவு திறக்கப்பட்டு சடங்கு நடைபெறும் கோயில்களாகவே பெரும்பாலான கோயில்கள் விளங்கின. வருடத்தில் நடைபெறும் ஒரேயொரு உற்சவத்திற்காக அங்கு வருடத்தில் ஒருமுறை கதவு திறக்கப்படுவதனால் கோயில்களின் உற்சவமும் 'கதவு திறத்தல்' எனறே அழைக்கப்படுகின்றன. அந்தவகையில் விஷ்ணு கோயில்களும் வருடமொரு முறை சடங்கு நடைபெறும் கோயில்களாகவே விளங்கின. திருவிழாக்கள் இல்லை. அவிபாகங்கள் படைக்கப்பட்டு பூசையோடு நாள்தோறும் கஞ்சன் அம்மானை படிக்கப்படுதலே சம்பிரதாயமாகும். சடங்குக் காலங்களில் படிக்கப்படும் ஏடுகளை வைப்பதற்கான பெட்டியினை ஏட்டுப் பெட்டியென வழங்குவர். சடங்குகளின் போது தெய்வத்திற்கு மடை வைப்பது போன்று இவ்வேட்டுப் பெட்டிக்கும் மடை வைப்பர். இவ்வேடுகள் இன்றுவரை பூசனைக்குரியவையாகவே விளங்குகின்றன. ஒவ்வொரு கோயிலிலும் கஞ்சன் அம்மானை படிப்பதெற்கென உரிமை பெற்ற மரபினர் (குடும்பம்) இருப்பர். இம்மரபினர் அக்கோயிலின் பூசாரியராகக் கூட இருப்பர். படிக்கப்படும் கதையைப் பக்தர்கள் குழுமியிருந்து கேட்பர். ஒருவர் பாட இன்னுமொருவர் கதை கூறுவதுமுண்டு. திமிலைத்தீவு விஷ்ணு கோயிலில் பூசகர் பாட அருணாசலதேசிகர் புராணபடனம் போன்று கதை கூறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (மௌனகுரு,சி.,2003:25).

மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களில் பழமைவாய்ந்ததாகவும் தனித்துவமானதாகவும் திகழ்வது திமிலைத்தீவு விஷ்ணு கோயிலாகும். ஆரம்ப காலங்களில் சடங்குகள் நடைபெற்று

இன்று திருவிழாவாக பரிணமித்திருக்கும் இக்கோயில் உற்சவம் இன்றும் பல தனித்துவங்களோடு நடாத்தப்பெறுகின்றது. வைகாசி மாத திருவோண நட்சத்திரத்தில் உற்சவம் ஆரம்பமாகும். இங்கு கொடியேற்றம் நடைபெறுவதில்லை. இங்கு முதல் நாள் நிகழ்வு 'மாங்கனி பறித்தல்' என்ற பெயரால் இடம்பெறுகின்றது. அன்று கஞ்சன் அம்மானை படிக்க ஆரம்பிக்கப்பட்டு கஞ்சன் தங்கைக்காக மாங்கனி பறித்தலோடு அம்மானை நிறுத்தப்பட்டதும் அன்றைய திருவிழா ஆரம்பமாகும். விஷ்ணு வாகனத்தில் எழுந்தருளி வலம்வரும் போது கஞ்சன் அம்மானையில் பாடப்பட்டுள்ள மாங்கனி பறித்து அதனால் முனிவரின சாபத்தினை கஞ்சன் பெறுவது நாடகமாக நடித்துக் காட்டப்படுகின்றது. தொடர்ந்து ஒவ்வொரு நாட்சடங்கிலும் அம்மானை பாடப்படுவதுடன் பூதகி வதை, மருது சால்சாய்தல், கன்று கொண்டு கனிக்கெறிதல், கூத்தரைக் கொல்லுதல், கருகசூரன் வதை, கஞ்சசம்மாரம், கலியாணச்சடங்கு என்பன முறையே படித்தும் நடித்தும் காட்டப்படுகின்றன. திருவிழாவிலே கஞ்சனுடைய ஈமக்கிரியைகளும் நடைபெறுகின்றன.

திமிலைத்தீவு விஷ்ணு கோயிலில் 'கலியாணப்படிப்பு' எனும் பெயரில் கல்யாணக்கால் சடங்கு நடைபெறுகின்றது. இதுவே இறுதிநாட் சடங்காக அமையும். கஞ்சன் அம்மானை படித்து கண்ணன் உருப்பினியை அம்மன் கோயிலில் கவரச் செல்லும் இடத்தில் அம்மானை பாடுவதை நிறுத்தி, கல்யாணக்கால் வெட்டச்செல்வர். கிரியைகளுடன் ஒர் இளம் வேப்பங்கன்றினை வெட்டி வந்து கல்யாணப்பந்தலில் நட்டு அதற்கு சேலைகளை அடுக்கடுக்காக சார்த்தி, கல்யாண கிரியைகளைச் செய்து தாலி கட்டுவர். இதன் போது மீண்டும் அம்மானை படிப்பு இடம்பெறும். கல்யாணச் சடங்கிற்கு மறுநாள் உற்சவம் அமுது கொடுத்தலுடன் நிறைவடையும். இவ்வாறு அனைத்துச் சடங்குகளும் கஞ்சன் அம்மானையை மையப்படுத்தியே முன்னெடுக்கப்படுகின்றது.

மட்டக்களப்பிலுள்ள மற்றுமொரு பழமையான கோயில் வந்தாறுமூலை விஷ்ணு கோயில். இங்கு உற்சவ காலத்தில் ஆழ்வார் பாடல்களை பாடி கண்ணனது சிறுபராய நிகழ்வுகள் நிகழ்த்திக்காட்டப்படுவதோடு, நொண்டிக் கூத்தும் ஆடப்படும். இங்கு புரட்டாதி மாத பூரணையிலே கஞ்சன் அம்மானை படிக்கப்படுகின்றது. அதாவது கிருஷ்ணன் கம்சனோடு போருக்கு சென்ற ஐந்து நாட்கள் யசோதை மகனின் வெற்றிக்காக விரதம் மேற்கொண்டார். அந்நிகழ்வை இவ்வூர் மக்கள் கஞ்சன் விரதம் எனும் பெயரில் பூரணைக்கு முந்திய ஐந்து நாட்களும் விரதமிருக்கின்றனர். அந்நாட்களில் கஞ்சன் அம்மானை ஏடுகள் படிக்கப்படுகின்றது. அம்மானை பாடுவதற்கென உரிமை பெற்ற குடும்பத்தினராலே இன்றுவரை பாடப்படுகின்றது. அம்மானை படிப்பு நிறைவடைந்தவுடன் நொண்டிக் கூத்து இடம்பெறுவது இவ்வாலய மரபு. கஞ்சனை வெற்றி கொண்ட கிருஷ்ணனாகவும் பலராமராகவும் நீல, மஞ்சள் நிறங்களை பூசி தங்களைப் பக்தர்கள் அலங்கரிப்பர். பூசகரிடமிருந்து ஆடுபவர்கள் வளைந்த தடிகளைப்

பெறுவர். ஆலய வீதியில் கையில் தடியினைப் பிடித்தபடி ஒற்றைக்காலில் பாடல்களைப் பாடி நொண்டிக் கூத்தாடுவர். இம்மரபு இவ்வாயத்திற்கு மட்டுமே இடம் பெறுகின்றது. கஞ்சன் என்பதற்கு நொண்டி என்றும் ஒரு பொருளுண்டு (கழகத்தமிழ் அகராதி,2004:254). நொண்டிக் கூத்து நிறைவடைந்ததும் கஞ்ச விரதம் முடிவடையும்.

பழுகாமம் விஷ்ணு கோயில் சிறப்பு வாய்ந்த பிறிதொரு கோயிலாகும். இங்கு ஆவணி திருவோணத்தில் ஆரம்பமாகும் உற்சவம் பதினொரு நாட்கள் இடம்பெறுகின்றன. இங்கும் கஞ்சன் அம்மானைப் படிப்பு இடம்பெறுகின்றது. ஐந்தாம் நாள் திருவிழாவில் உருப்பினி கல்யாணமும் பதினொராம் நாளில் திருவேட்டையும் இடம் பெறுகின்றது.

திருவோண நட்சத்திரத்தினை முன்னிட்டே மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களில் உற்சவங்கள் இடம்பெறுகின்றன. கேரளாவில் ஓணம் பண்டிகையாக இடம் பெற இங்கு கிருஷ்ண அவதார நட்சத்திரமாக கருதப்பட்டு உற்சவங்கள் இடம்பெறுகின்றன. இதுவும் கஞ்சன் அம்மானையின் அடிப்படையிலே கட்டமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணனின் பிறப்பினை,

> ''ஒன்பது கோளும் உறவு செய்யும் வேளையிலே
> இன்ப சுகந்தவசு வென்னும் முகூர்த்தமதில் .......
> சீரான செல்வத் திருவோண நளையிலே
> பேராளன் வந்து பிறந்தான்கா ணம்மானை'' (கஞ்சன் அம்மானை:17)

கஞ்சன் அம்மானை குறிப்பிடுகின்றது.

இங்குள்ள விஷ்ணு கோயில்களில் சைவசமயக் குருக்கள், பூசகர் முதலானோரே கிரியைகளை மேற்கொண்டுவருகின்றனர். வைணவ ஆசாரியர்கள் அங்கம் வகிப்பதில்லை. வைஷ்ணவர்கள் தோள்களிலே சங்கு சக்கரங்களை தரித்து திருமண் காப்பணிந்து கழுத்தில் துளசிமணி, தாமரைமணி மாலைகளை அணிவர். ஆனால் இங்கு விஷ்ணுவை வழிபடும் மக்கள் கிட்டிணன், கோவிந்தன், கோபாலன் என பெயர்களை சூட்டுகின்றனர் எனினும் ரூபங்களைத் தரிப்பதோ, வைஷ்ணவ பரிபாசைகளைப் பேசுவதோ இல்லை. திருநீறே தரிக்கின்றனர். இதனை கஞ்சன் அம்மானையில் வரும் ''திருநீறு மஞ்செழுத்துஞ் சீர் உருத்திராக்கமுமாய்...'' (கஞ்சன் அம்மானை:248) எனும் வரிகளும் பிரதிபலிக்கின்றன. எனவே நாம, ரூப, பாஷா வைணவர்களாக அல்லாமல் இந்துக்கள் என்ற பொது நிலையில் விஷ்ணுவை வழிபட்டு வந்துள்ளனர். ஆரம்பகால விஷ்ணு கோயில் சடங்குகள் கஞ்சன் அம்மானையை முன்னிறுத்தியே இடம்பெற்று வந்துள்ளன. காலப்போக்கில் வருடமொரு முறை இடம் பெற்ற சடங்குகள் திருவிழாக்களாகவும், நித்திய பூசைகள் இடம் பெறும் கோயில்களாகவும் மாற்றமடைந்துள்ளனவாயினும் பழமையான விஷ்ணு ஆலயங்களில்

இன்றும் கஞ்சன் அம்மானைப் படிப்பும், அதனோடு தொடர்புடைய கலைகளும் மரபாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு தேசத்தாரின் வழிபடுதெய்வங்களுள் பிள்ளையாருக்கும் முக்கிய இடமுண்டு. மாமாங்கம், களுதாவளை போன்ற இடங்களில் பழம்பெரும் கோயில்களும் அமைந்துள்ளன. இத்தேசத்தில் கஞ்சன் அம்மானை விஷ்ணு கோயில்களில் மட்டுமல்லாது பிள்ளையார் கோயில்களிலும் படிக்கப்பட்டு வந்துள்ளது. அதில் இடம்பெறுகின்ற கரடியர்கோன் கதையின் முக்கியத்துவம் காரணமாக விநாயகர் சதுர்த்தியின் போது படிக்கப்படுவது மரபாக இருந்துள்ளது. இம்மரபுவழி இன்றும் ஒரு சில கோயில்களிலே பாடப்பட்டுவருகின்றது.

சதுர்த்தி பிறையினை அதிலும் ஆவணிமாத சதுர்த்தி பிறையினை தவறுதலாக வேணும் பார்க்க நேர்ந்தால் ஏற்படும் தோஷ நிவர்த்திற்காகவும் கஞ்சன் அம்மானை பாடுவது சம்பிரதாயமாகும். இதனை

“சதுர்த்தி பிறைகண்ட தக்கவர்களிக்கதையைத்
துதித்திருந்து கேட்கத் தொலையுங்கா ணம்மானை
கதித்தே அசுரர் கண்டம் பிளந்திடக் கண்டமரர்
குதித்தே புகழ்ந்திடும் கூராழி மாயன் குரைகழற்றாள்
துதித்தே கரடியர் கோன்கதை கேட்பவர் சொல்வர்தனை
மதித்தே சதுர்த்திப் பிறைகண்ட தோசமகன்றிடுமே....” (கஞ்சன் அம்மானை:149)

என வரும் அம்மானை வரிகளும் எடுத்துரைக்கின்றன. பிறை கண்டவர்கள் அம்மானை பாடி முடிந்ததும் ‘பொங்கல் அமுது’ செய்து தோஷ நிவர்த்தி பெறலாம் என்பது இம்மக்களது நம்பிக்கையாயிருந்தது.

பொதுமக்கள் இலக்கியமாக அம்மானைகள் திகழ்வதால் வீடுகளில் பொழுது போக்கிற்காகவும் பாடிவந்துள்ளனர். அதாவது இரவு வேளைகளில் ஒருவர் பாட மற்றவர்கள் கேட்டு இன்புறுவர். எனினும் இவ்வழக்காறுகளும் சில தசாப்தங்களுக்கு முதல் வழக்கொழிந்துபோயுள்ளன.

## வைஷ்ணவ சித்தாந்தம்

கஞ்சன் அம்மானையானது வைணவ சமய, வழிபாட்டு மரபுகளை வழிப்படுத்தும் இலக்கியமாக மாத்திரமல்லாது வைஷ்ணவ சித்தாந்தங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்ற இலக்கியமாகவும் படைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் வைஷ்ணவ சித்தாந்தமாகிய விசிட்டாத்வைதத்தின் இழையோடல்களையும் காணமுடியும்.

விசிட்டாத்வைதம் சித் (சேதனம்), அசித் (அசேதனம்), ஈஸ்வரன் எனும் முப்பொருள் உண்மையை சாதிக்கும் தத்துவமாகும். இம்மூன்று தத்துவங்களும் தத்துவத்திரயம் எனப்படும். இதில் சித் என்பது ஆத்மாவையும் அசித் என்பது உயிரற்ற அனைத்து சடப்பொருட்களையும் குறிக்கும். ஈஸ்வரன் என்பது திருமகளுடன் உறைகின்ற ஸ்ரீமன் நாராயணனே. சித்தும் அசித்தும் இறைவனின் அங்கங்கள். இவற்றை உடலாக உடைய அங்கி தான் இறைவன். அவனது அருளாலே உடலின் தொடர்பை அறுத்து, பகவானை அடைவதே முத்தி. இதற்கு பக்தியே சிறந்தவழி என எடுத்துரைப்பதே வைஷ்ணவ சித்தாந்தம்.

நித்தியவஸ்துகள் யாவற்றிலும் ஈஸ்வரனே முதன்மையானவர். சேதனம், அசேதனம் ஆகிய இரண்டுமே இவனுக்கு சரீரமாக அமைந்து நிற்கும். இவன் எல்லா உயிர்களுக்கும் பலனாகவும் அப்பலனை அடைகின்ற மார்க்கமாகவும் விளங்குகின்றான். ஈஸ்வரன் பற்றிய கருத்தியல்கள் கஞ்சன் அம்மானையில் இழையோடுமாற்றை நோக்கலாம். ஸ்ரீமன் நாரணனே விசிட்டாத்வைதம் குறிப்பிடும் ஈஸ்வரனாகும்.

''கண்ணனே நாரணனே காரணனே காயாம்பூ
வண்ணனே மாதவனே மாயவனே...'' (கஞ்சன் அம்மானை:147)

என அம்மானை வரிகள் கண்ணனே நாராயணன் என்பதை விளிக்கின்றன.

ஈஸ்வரனே யாவற்றிலும் முதன்மையானவன். அதன்வழி மும்மூர்த்திகளிலும் ஏனைய தேவர்கள் யாவரிலும் முதன்மையானவர் எனும் குறிப்புக்களும் பிரபந்தத்தில் விரவிக்கிடக்கின்றன.

''ஆழியுலகுதனி லாண்ட ரசுர்கட்கும்
வாழும் மகேந்திரர்க்கும் மற்றோர்க்கும் நாயகமாய்..'' (கஞ்சன் அம்மானை:97)

''நாரணன்காண் தேவர்கள் தன் நாயகன் காணம்மானை..'' (கஞ்சன் அம்மானை:6)

''மெய்யனே விட்டுணுவே வேதாவைப் பெற்றவனே...'' (கஞ்சன் அம்மானை:108)

''வானோர் பணிந்தேத்தும் வைகுந்த நாயகனை..'' (கஞ்சன் அம்மானை:72)

என்று பிரம்மன் முதலிய தேவர்களுக்கு அதிபதி எனச்சுட்டி ஈஸ்வரனின் முதன்மைத் தன்மை புலப்படுத்தப்படுகின்றது.

வைஷ்ணவம் ஸ்ரீமன் நாராயணுக்கு உயர்வற உயர்ந்த பேரருட் குணங்களை குறிப்பிடுகின்றது. அதாவது நாரணன் சௌசீல்யம், வாத்ஸல்யம்(பேரன்பு), மார்தவம், ஆர்ஜவம், சௌஹார்தம், ஸாம்யம், காருண்யம், மாதுர்யம், காம்பீர்யம், ஔதார்யம், சாதுர்யம், ஸ்தைர்யம், தைரியம், ஷௌர்யம், பராக்கிரமம், சத்யகாமம், சத்யசங்கல்பம்,

க்ருதித்வம், க்ருதக்ஞுத்வம் முதலிய கல்யாணகுணங்கள் பொலியப்பெற்றவன். இக்கல்யாண குணங்கள் அம்மானை முழுவதும் விரவிக்கிடக்கின்றன.

''கமலபத்திராட்டி யென்பாள்
தேரிற்புகப்பாய்ந்து சீராமனைப் பணிந்து....
மெய்யுமுயிரும் விசாரமும் மற்றுமுள்ள
உன்வசமாக்கி யுனையே பணிந்து நிற்கும்
என்வசமாக்கி யெனக்கிப்போது வீடுதந்து....
அவளையுடலுடனே
மண்ணிலுள்ளோர் கண்காண வானோர் புடைசூழ
எண்ணுற்ற வைகுந்த மேற்றுவித்தாரம்மானை....'' (கஞ்சன் அம்மானை:76)

''ஓயாதே யுண்னோடு யுத்தம் யான் செய்ததனைப்
போராழி மாலே பொறுத்தருளு மென்றுரைத்துப்
பாதந்தொழுது பலவிசையாய்த் தாள்துதிததான்
மாதவ னன்பாகி வாணனைப் பார்த்துரைப்பான்
அல்லாநீர் தானே ஆயிரங்கைக்குண்டான
எல்லா மிடுக்கு மிரண்டு கைக்கு முண்டாகித்
துன்று விரும்பும் தொலையாத செல்வமுடன்
என்றுமிருப்பை எனவே வரங் கொடுத்து
அங்கமல மேனி யமலனும் அச்சுதனும்
பூங்கமல வாணனைப் போகவிட்டாரம்மானை....'' (கஞ்சன் அம்மானை:226)

என கஞ்சன் அம்மானையில் பகைவர்க்கும் இனியவனாகத் திகழல், சரண்புகுவோர்க்கு அருள் புரியும் மகோன்னத குணம் எனப்பல நாராயணனின் திவ்விய குணங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

**ஐவகை நிலைகள்**

வைணவ மரபில் ஈஸ்வரனுக்கு ஐந்து நிலைகளைக் குறிப்பிடுவர். அவை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பவையாகும். பரம் என்பது பரமபதத்தைக் குறிக்கும். அதாவது பிராட்டியாரோடு பெருமாள் புலனுலகுக்கு அப்பால் உள்ள திருநாட்டில் திகழும் பாங்காகும். நாரணன் திருமேனியை ''திவ்விய மங்கள விக்கிரகம்''என்பர். மின்மினி பூச்சியை விட சூரிய ஒளி எவ்வளவோ பிரகாசித்தல் போல எல்லையற் பேரொளி வடிவான திருமேனி. சௌகுமார்யம், சௌந்தர்யம், லாவண்யம், சௌகாந்தியம், யௌவனம் முதலான கல்யாண குணக் கூட்டத்திற்கு கொள்கலமாய் இருப்பது. உற்பத்தியாதல், நசிதல், வளர்தல்,

குறைதல், முதலான விகாரங்களும் இல்லை.பலவித அவதாரங்களுக்கும் மூலவித்து. எல்லாவித திவ்யாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பது. மேலும் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளோடு கூடியிருக்கும். நித்தியசூரிகளும், முத்தர்களும் அனுபவிபதற்கு உரியதாய் இருக்கும் இயல்பு. இவ்வியல்பை அம்மானை

''ஆதி திருமேனி அஞ்சனக் குன்றொக்குஞ்
சோதிவடிவம் துணையடிக் கண்ணிணைகள்
செங்கமல மொக்கும் திருப்புயம் நான்குண்டு
சங்கு திகிரி தனிவா ளிவையுமுண்டு
பீதாம்பரமுண்டு பேராயுதமுமுண்டு
சீதாம் புயமான் திருமறு மார்பிலுண்டு
பொன்பெற்ற பூண்மார்பிற் பூந்துளாய் மாலையுண்டு
அன்பர்களுக்கு முத்தி அருள்கிடைக்கும் கண்ணுண்டு..'' (கஞ்சன் அம்மானை:167)

எனப் பாடுகிறது.

வியூகம் என்பது விரிவுபடுத்தல் எனப் பொருள் கொள்ளப்படும். ஸ்ரீமத் நாரணன் நான்கு ரூபங்களில் தன்னை விரிவுபடுத்தி ஆன்மாக்களை இரட்சித்தல் வியூக நிலையாகும். அதாவது பரவாசுதேவன் லீலாவிபூதியில் முத்தொழில்களை நடைபெறச் செய்யவும், சம்சாரிகளுக்கு வேண்டியவற்றை ஈந்து வேண்டாதவற்றை நீக்கி தாத்தற்பொருட்டும் பரமபதத்திலிருந்து பாற்கடலை வந்தடைந்து பாம்புப் படுக்கையில் ஸ்ரீதேவி, பூதேவி சகிதமாக யோகநித்திரை செய்யும் நிலை. இந்நிலையை அம்மானை

''திரிபுவன நாதன் திருப்பாற் கடல் நடுவே
ஏரிகிரண பத்மமணி யெங்கும் நிலவெறிப்ப
இரசத்தின் மிக்க எழிற்பள்ளிக் கட்டிலின்மேல்
முரசமியம்பிடு பால் மதுகடலின் மீமிசையே
ஆயிரஞ்சென்னி அரசனெனும் பாய்விரித்து .....
காருலவு மேனியான் கண்துயின் றானம்மானை..'' (கஞ்சன் அம்மானை:12)

எனப் பாடுகிறது.

பகவான் தம்மை வியூகவாசுதேவன், அநிருத்தன், பிரத்தியும்னன், சங்கர்ஷணன் என வியூகப்படுத்தும் நிலையாகும். இந்நிலைகளை நாலாயிரம் திவ்யபிரபந்தத்தில் ஆழ்வார்கள் பாடிச் சிறப்பித்துள்ளனர். திருமழிசையாழ்வார்,

''ஏகமூர்த்தி மூன்று மூர்த்தி நாலுமூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி எண்ணில் மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய் நலங்கடற் கிடந்துமேல

ஆகமூர்த்தி யாயவண்ணம் என்கொலாதி தேவனே'' (திருச்சந்தவிருத்தம்:17)

என்ற பாசுரத்தில் ஏக மூர்த்தி என பரவாசுதேவனையும், மூன்று மூர்த்தியாக சங்கர்சணன், பிரத்தியும்னன், அநிருத்தன் ஆகிய அவதராங்களையும் சுட்டுகிறார்.

கிருஷ்ணவதாரத்திலே இவ்வியூக நாமங்கள் தமையனாக, மகனாக, பேரனாக இடம்பெறுகின்றன. சங்கர்சண வடிவே பலராமராவார். மற்றைய வியூகங்கள் மகன், பேரன் என்போரைக்குறிக்கும். மன்மத தகனத்திற்குப் பின் காமன் கண்ணனுக்கும் உருக்குமினிக்கும் மகனாக பிரத்தியும்னன் என்னும் பெயருடன் தோன்ற அவனுக்கு மகனாக அநிருத்தன் தோன்றுகிறான்.(கந்தசாமி.சோ.ந. இந்தியத்தத்துவக் களஞ்சியம்.ப.3) இவ்வனிருத்தன் வாணன் மகள் உழை பொருட்டு இறைப்பட்ட போது அவனை மீட்டு சோ நகரத்தில் பிரத்தியும்னன் பேடிக் கூத்து ஆடியமையை சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனை,

''ஆண்மை திரிந்து பெண்மைக் கோலத்து
காமன் ஆடிய பேடி ஆடலும்...'' (சிலப்பதிகாரம்: 6:56.)

எனும் பாடல் குறிப்பிடுகின்றது.

அந்தவகையில் கஞ்சன் அம்மானையிலும் வாசுதேவனின் வியூகங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதாவது கிருஷ்ணருக்கு பிரத்தியும்னனும் அநிருத்தனும் மகன், பேரன் என்ற உறவாக அல்லாமல் இரட்டையராகப் பிறந்ததாகக் கூறுகின்றது.

''ஒண்பூமா தேவி யுருப்பிணியாய்ப் பிறந்து
வண்பூவை வண்ணற்கு மாதேவி யாகியநாள்
அன்னாள் வயிற்றி லணியிரண்டு பிள்ளைகளாய்
உன்னா யுதமோடும் உதிப்பா..''(கஞ்சன் அம்மானை:ப.158)

''கன்னற் சிலையும் கடிபூங் கணையைந்தும்
வண்ணமகர கொடியும் வடிவுடனே
சொல்லிய பங்குனியிற் சோதி நட்சத்திரத்தில்
இல்லால் உருப்பிணிதான் ஈன்றாள் இரட்டையரை...'' (கஞ்சன் அம்மானை:153)

''...ஆன பிறதூமன் அனுவுத்திரனென்று
மைந்தர்க்கு பேருமிட்டு... (கஞ்சன் அம்மானை:158)

என விஷ்ணுவின் மகன்களாக குறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நான்கு வியூகங்களும் மும்மூன்றாக பன்னிரு கிளை வியூகங்களாக பிரியும். வாசுதேவனிடமிருந்து கேசவன், நாராயணன், மாதவன் என்ற மூன்று கிளைகளும், சங்கர்ஷணனிடமிருந்து கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் எனும் கிளைகளும், பிரத்தியும்னனிடமிருந்து திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன் எனும் கிளைகளும், அநிருத்தனிடமிருந்து இருடீகேசன், பதுமநாபன், தாமோதரன் எனும் கிளைகளும் தோன்றிப்

பெயர்பெறும். இப்பன்னிருவர் குறிப்பாகவே வைணவர் துவாதசமாக திருமண்காப்பிட்டுக் கொள்வர்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட ஈஸ்வரன் எடுக்கும் அவதார நிலையினை விபவம் என்பர். இவ்வவதாரங்களை பூர்ணா அவதாரம், அம்சாவதாரம், ஆவேசவதாரம் எனப் பாகுபடுத்திக் கூறுவர். அவதாரங்கள் பலவாயினும் பத்தெனப் பகர்தல் ஒரு மரபாகும். இவ்வவதாரங்களைப் பற்றிய செய்திகள் அம்மானை முழுவதும் விரவிக்கிடக்கின்றன.

திருமாலின் முதல் அவதாரமாக அமைவது மச்சவதாரம். பகவான் நான்கு திருக்கைகளுடன் மேற்பாகம் தேவரூபமாகவும் கீழே மீனின் உருவமாகவும் காட்சி தருவார். இவ்வவதாரத்தை அம்மானை

"வானுருவமின்றி வளரும் நீ சாகரத்தில்
மீனருவாய் நீதான் விளையாடும் நாளகத்தும்..." (கஞ்சன் அம்மானை:147)

என்று பாடுகிறது.

தேவர்களும் அசுரர்களும் மேருமலையினை மத்தாக நட்டு பாற்கடலை கடையுங்கால் அம்மலைக்கு பகவான் கூர்ம வடிவு கொண்டு ஆதாரமளித்து நிறுத்தியமையே கூர்மவதாரமாகும். இக்கூர்ம அவதாரம் எடுத்தமையால் தான் பாற்கடலைக் கடைவது இயல்பாயிற்று. இவ்வாறு கடைந்த போது தோன்றியவற்றுள் திருமகள், பாஞ்சன்னியம், சாரங்கம், கோமேதகி, கௌத்துபம் ஆகிய ஐந்தினையும் திருமால் ஏற்றார். இக்கூர்மவதார நிகழ்ச்சியை,

"ஆதி யுகத்திலசுரருந் தேவர்களும்
சீதக்கடல்கடைந்து தெள்ளமுத முண்பதற்காய்
மந்தரமே மத்தாக வாசுகியே தாம்பாகச்
சந்திரனே மத்திமமாய்த் தாழியு மேழ்கடலாய்ச்
சீராமனான திருமகள் தன்கேழ்வன்
பேராமையாகிப் பொருநீரி னுட்கிடப்ப
மாலின் முதுகில் மணிமந்த ரஞ்சுழல.." (கஞ்சன் அம்மானை:334-335)

என அம்மானை எடுத்துரைக்கின்றது.

இரண்யாட்சன் பூமிப்பிராட்டியை கடலுக்கடியில் வைக்க வராக அவதாரம் செய்து அவனை வென்று பிராட்டியை தனது தந்தத்திலே ஏந்திக்கொண்டு வந்து நிலைபெறச் செய்தார். இதனை

‘‘முன்னே யுகங்கள் மூண்ட பகைதீர்த்து
அன்னைபிதா வாகியெங்கட் காதி வராகனுமாய்...’’ (கஞ்சன் அம்மானை:13)

என்றும்

‘‘பாந்தளணைய நின் பாரிற் புவிமடந்தை
நின்னாலகன்று நெடுகடலிற் போய்விழவே
அன்னா ளவனு மரிதானுகந்தானும்
அண்ட முகடண்ட மாகாச முள்ளமட்டும் நீ
சண்ட வராகமாய்த தன்னுடைய மாமருப்பில்......’’ (கஞ்சன் அம்மானை:119)

எனக் குறிப்பிடுகின்றது.

ஈஸ்வரன் தன்னை நினைத்த அடுத்த நாழிகையில் எந்த வேடத்தையும் தாங்கி வருவான் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது நரசிம்மவமதாரம். இரணியனை அழித்து தன்னை நினைத்த அவனது மகனான பிரகலாதனைக் காத்தருளிய செயல்,

‘‘நரா மிரணியனை நரசிங்க மாய்வதைத்தும்...’’ (கஞ்சன் அம்மானை:13)

‘‘வரசிங்க மன்னன் வலிசேரிரணியனை
நரசிங்க ரூபமாய் நலிக்க வந்த வந்நாளும்..’’ (கஞ்சன் அம்மானை:148)

என்றும் அம்மானையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

பிரகலாதனின் பேரனான மாபலி மூவுலகிற்கும் அதிபதியானான். அவனிடம் குறளனாக வந்து மூன்றடி மண் இரக்க, மாபலி வழங்க நெடியோனாக ஓங்கி மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்து மாபலியின் தலையில் பாதம் வைத்து பாதலத்து இருத்தி ஆட்கொண்ட அவதாரம் வாமன அவதாரமாகும். இவ்வவதாரத்தை

‘‘மாவலி யென்னும் வலுப்பேரும் தன்னுடைத்தாய்
மாமன்னர் சூழ மகிழ்ந்திருக்கும் மன்னவன் முன்
சூதாய்க் குறளுருவாய்த் தோன்றி நின்று மாதவனும்
முன்பென்றன் காலால் மூவடிமண் தாவெனவே
அன்பாய்ப் பொருந்தி அவன் தத்தம் பண்ணியபின்......
வான்திருந்த வோங்கு மடைவுகே ளம்மானை...’’ (கஞ்சன் அம்மானை:ப.186)

என்றும்

‘‘ஈரடியே கண்ட தெமக்கிசைந்த மூவடியில்
ஓரடியும் தா வென் றுறவே பிடித்தருளி...’’ (கஞ்சன் அம்மானை:187)

என்றும் அம்மானை வரிகள் சுட்டுகின்றன.

தசரதன் மகனாக அவதரித்து இராவணனை அழித்த கதையே இராமவதாரமாகும். இந்நிகழ்வை,

"சேயோன் மரபிற் தெசரதன் மைந்தனென்னை

மாயோ னிராமனாய் வந்து புக்கா னம்மானை..." (கஞ்சன் அம்மானை:5)

"ஏமனிராமனாய் இராவணனை யீடழித்தும்.." (கஞ்சன் அம்மானை:13)

எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு கஞ்சன் அம்மானை திருவதாரங்களினூடாக ஈஸ்வத்துவத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.

எப்பொருளிலும் உள்ளிருந்து இயக்கும் அந்தர்யாமித்துவம். அனைவராலும் எளிதில் கண்டு வணங்கும் விதமாக கோயில்களில் சிலை வடிவத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் நிலை அர்ச்சை. பொய்கையாழ்வாரின் 'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே'(முதலாம் திருவந்தாதி:44) என்ற வாக்கின் பிரகாரம் அன்பர்கள் தனக்கு எதை திருமேனியாகக் கொள்கின்றாரோ அதனையே தனக்கு வடிவமாகக் கொள்ளும் நிலையாகும். அர்ச்சை திருமேனியாய் சிறிரங்கத்தில் கோயில் கொண்டுள்ள நிலையினை

"தென்னரங்கிற் கண்டுயிலும் சீரங்கராயன்றிப்

பின்னையொரு தெய்வத்தைப் பேசுகிலோ வம்மானை

அன்னஞ்சு பொன்னின் அரங்கன் திருவிளையாட்

டின்னும் சிலகா லியம்பக்கே ளம்மானை..." (கஞ்சன் அம்மானை:98)

"சீரங்க மேவும் சிறிவாசு தேவன் காண்

நாரணன்கான் தேவர்கள் தன் நாயகன் காணம்மானை.."( கஞ்சன் அம்மானை:6)

"தென்னரங்கச் செல்வன் சீதரன் சீராமன்..." (கஞ்சன் அம்மானை:247)

என்றும் திவ்வியதேசங்கள் 108 இனையும்

"அன்றா லிலையிற் றுயின்றா னமர்ந்துறையும்

நன்றான நூற்றெட்டு நற்பதியுந் தான்பாடி...." (கஞ்சன் அம்மானை:3)

என்றும்

"மண்ணாளர் வாழும் மதுரைத் திருநகரில்

விண்ணாளும் நாயகனே வீற்றிங்கே நீயிருந்தால்

உன்பாதம் கண்ட உலகத்தோராரெனினும்

பின்பாக முத்தி பெறுவதற்கையமில்லை.." (கஞ்சன் அம்மானை:106)

என்றும் அம்மானை ஆசிரியர் பாடிச்சென்றுள்ளார். கோயில் கொண்டுள்ள அர்ச்சை நிலையே ஆழ்வார்களால் அதிகம் அநுபவித்துப் பாடப்பட்டதும், பிரபக்தி செய்யப்பட்டதும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விசிட்டாத்வைதம் ஈஸ்வரனுக்கும் உலகு, உயிர்களுக்கும் உள்ள தொடர்பையும் வேறுபாட்டையும் தெளிவுறுத்த சரீரசரீரி சம்பந்தத்தை முன்வைக்கும். உடலுக்கும்(சரீரம்) உயிரிற்கும்(சரீரி) உள்ள தொடர்பு போலவே ஈஸ்வரனிற்கும் உலகு உயிர்க்குமான தொடர்பு. உலகும் உயிரும் சரீரமாக விளங்க அதனை கட்டுப்படுத்தி இயக்கும் சரீரியாக ஈஸ்வரன் விளங்குகிறார். ஈஸ்வரன் உலகினுள்ளும் உயிர்களினுள்ளும் அந்தர்யாமியாய் உறைந்திருக்கிறானெனினும் அவற்றைக்கடந்து சுதந்திரமானவன் என்பது சித்தாந்தம்.

சித்தும் அசித்தும் இறைவனின் திருமேனி. சித்துக்களுக்கு போக்கியமாகவும், போகத்தை அனுபவிக்கும் இடங்களாகவும் இருக்கும் அசித்தாகிய அசேதனம் சுத்தசத்துவம், மிச்ர தத்துவம், சத்துவ சூனியம் என்று மூன்று வகையாகப் பேசப்படுகிறது. இதில் சுத்த சத்துவம் பிறிதொரு குணமும் கலவாத தனித்த சத்துவத்தை உடையது. இதுவே நித்திய விபூதியாக(வைகுந்தம்) பரவி நிற்கின்றது. ஊழிக் காலத்திலும் அழிவில்லாதது. மிச்ர தத்துவம் என்பது மூலப்பிரகிருதியாகும். இது திரிகுணங்களாலானது. சித்துக்களின் சம்சாரத்துடன் பந்தமுற்று நிற்பது. இப்பிரகிருதி 24 தத்துவங்களாக பரிணாமமடைகிறது. இந்த தத்துவம் ஈஸ்வரப்படைப்பில் பரிணாமங்களுக்கு காரணமாய், அவனுடைய படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய விளையாட்டிற்கு கருவியாய் பயன்படுகின்றது. அசித்தின் இம்மூன்று பகுதிகளும் ஈஸ்வரனின் உடல் என்பதே விசிட்டாத்வைதத்தின் சரீரசரீரி சம்பந்தமாகும்.

வைணவ சித்தாந்தப்படி ஈசுவரன் தானாகவும் நான்முகன் மூலமாகவும் இந்த அண்டத்தைப் படைக்கிறான். அண்டத்தைப் படைத்து அதற்குள் நான்முகனைப் படைத்தல் 'சமஷ்டி சிருஷ்டி' எனப்படும். பின் நான்முகன் வாயிலாக இந்த அண்டத்திற்குட்பட்ட பதினான்கு உலகங்களையும், தேவர். மனிதர், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலியவற்றைப் படைத்தல் 'வியஷ்டி சிருஷ்டி' ஆகும். இதனை அம்மானை

''நாகந்தனிற்கிடந்த நாராயணமூர்த்தி
உந்தியினுள்ளே ஒரு தாமரைப்பூவில்
வந்ததோ ராணம் வருசம் நூறாயிரம்பின்
பேதிப்ப ஆதி பிரமா வெளிப்பட்டான்
ஓது மறையு முலகு பதினாலுந்
தந்துபின் தந்தான் சதிர்விறு மாக்கள் தனை....'' (கஞ்சன் அம்மானை:154)
''மெய்யனே விட்டுணுவே வேதாவைப்பெற்றவனே...''(கஞ்சன் அம்மானை:108)

என்றும்

''அந்தநெடுமால் அகிலம் பதினாலும்
தந்தானை யுந்தியிலே தந்தான் காணம்மானை
உந்திக் கமலத்துதிப்பித்த வேதாவை

வந்தித்த வேதியனை மாயோனருள் புரிந்து
எட்டிக்கருத்தாலே எவ்வுலகு மெவ்வுயிரும்
சிட்டித் திருக்கச் செயவிட்டாரம்மானை…''(கஞ்சன் அம்மானை:4)

என்றும் எடுத்துரைக்கின்றது.

மேலும் உந்தியினின்று உயிர்களும் உலகும் தோன்றியவாதலின் அந்நாபிக்கமலத்தைச் சிறப்பித்து பத்மநாபன், புண்டரிகாஷகன் எனப்பல நாமங்களால் திருமாலை வழங்குவர். அதன்வழி அம்மானையும் ''புண்டரீகக் கண்ணன்'' (கஞ்சன் அம்மானை:247), ''புண்டரிக ஆதியே'' (கஞ்சன் அம்மானை:4) என விழிக்கப்படுகின்றது.

ஈஸ்வரன் தானே உலகு, உயிர்களாக வியாபித்து சிருஷ்டியாகி எல்லாப் பொருள்களுள்ளும் அந்தர்யாமியாய் உள்நின்றியங்கி காப்பார். ஊழியின் இறுதியில் அப்பொருள்கள் எல்லாவற்றையும் அழிக்கின்றார். அதாவது தன்னுள் அனைத்தம் நிற்க உலகத்தை உண்டு உமுழ்தலான பிரளயம் இடம்பெறும். ஊழி தோறும் இந்தப் பூவுலகம் புதுப்பிக்கப்படுகிறது. கஞ்சன் அம்மானையும் அழித்தலை உண்ணலாகவும், படைத்தலை உமிழ்தலாகவும் குறிப்பிடுகின்றது.

''உள்ளந் தெளிந்து உலகமெலா முண்டுமிழ்ந்த…''(கஞ்சன் அம்மானை:17)

''செகத்தை முழுதுண்டு தெகிட்டாத வுந்தியது…..''(கஞ்சன் அம்மானை:22)

''பாருண்டவாயானும் …..'' (கஞ்சன் அம்மானை:84)

ஈஸ்வரன் அனைத்தையும் சிருஷ்டித்து சேதநர்களின் ஈடேற்றத்திற்கு தக்க வழிகளை நல்குவார். சேதநர்களை வினை பற்றுவதால் அவர்கள் தத்தம் வினைகளை துய்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வான்மாக்கள் பெருமாளை சரண் அடைந்து வினைகளைக் களைவர். இதனை,

''ஊழ்வினை வந்தடர உன்னாற் கதிபெற்றான்…'' (கஞ்சன் அம்மானை:180)

''மலைப்பறு வாணனை வதைத்த மாயனைத்
தலைப்புற நினைப்பவர் தமது தீவினை
பிறப்பெலாம் நீத்து நல்வினை
தனைத்தரும் மலர்ப்பதம் சரணங்களே…..
இப்புவி தனிலிருந் தின்ப மெய்தியே
மெய்ப்புயல் நிறத்தன் வைந்குந்தஞ் சேர்வரே'' (கஞ்சன் அம்மானை:227)

மெய்யுணர்வு பெறும் ஆன்மாக்களுக்கு வினைகள் இலதாகிவிடும். அதாவது இறைவன் அடியார்க்கு இருவினைப் பிணிகளை அகற்றுகிறான். பந்தங்களிலிருந்து விடுபட்ட ஆன்மாக்கள் வைகுந்தஞ் சேர்ந்து முத்தராய் இன்புறுவர் என்பது சித்தாந்தம். ''பேராளன் வைகுந்தம் பெற்றிருப்பர் அம்மானை'' (கஞ்சன் அம்மானை:பா.245). ஆன்மாக்களின் இலக்கும் இதுவே.

விசிட்டாத்வைதம் குறிப்பிடுகின்ற முத்தி என்பது பெரிய பிராட்டியுடன் திருமால் உறைகின்ற பரமபதமாகிய ஸ்ரீவைகுண்டத்தை அடைதலேயாகும். இதுவே நித்தியவிபூதி. அளவிறந்த ஆனந்தமயமானது. வீடுபேறு அடைவதற்கான மேற்கூறிய உபாயங்களை அநுட்டித்து அவன் திருவருளை பெற்ற முமுட்சுகள் தான் இந்த நீள்விசும்பினை அடைதல் முடியும். இவர்கள் மீள பூவுலகிற்கு திரும்புவதில்லை. வைகுந்தத்தினை ''பொன்னுலகு''(ப.105) என அம்மானை சுட்டுகிறது. இவ்வாறு கஞ்சன் அம்மானை கிருஷ்ணருடைய வரலாற்றை இயம்புகின்ற பனுவலாக மட்டுமன்றி வரலாற்றினூடே வைஷ்ணவ சித்தாந்தத்தையும் எடுத்துரைக்கின்றது.

**நிறைவுரை**

மட்டக்களப்பு தேசத்தில் பெண்தெய்வ வழிபாடு முதன்மை பெற்றிருந்தாலும் வைஷ்ண வழிபாடும் தத்துவமும் அம்மக்களின் சமய வாழ்வியலில் பண்டைக்காலம் முதல் பிணைப்புற்றிருந்தமைக்கு கஞ்சன் அம்மானை தக்க சான்றாக விளங்குகின்றது. இவ்விலக்கியம் புனிதத்தன்மையுடையதாக, பூசிக்கப்படு பொருளாகத் திகழ்வதோடு இத்தேசத்தவரின் மரபுசார் விஷ்ணு வழிபாட்டினை நெறிப்படுத்தும் பனுவலாகவும் மிளிர்கின்றது. இவ்விலக்கியம் மக்களின் சமய வாழ்க்கையில் மட்டுமன்றி பொழுதுபோக்கிற்காக நாளாந்தம் திண்ணைகளில் பாடிப் பொருள் கூறி மகிழ்ந்த சிறப்பிற்குமுரியது. இக்கஞ்சன் அம்மானை கிருஷ்ண அவதாரத்தை எடுத்துரைக்குமிடத்து வைஷ்ணவ சித்தாந்தத்தையும் பிரதிபலித்து நிற்கின்றது எனலாம்.

**உசாத்துணை**


கந்தசாமி,சோ,ந., (2003), இந்திய தத்துவக் களஞ்சியம், தொகுதி-3, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, பக் 189-265.

கமலநாதன்.சா.இ.,(பதி), (2002), பாரத அம்மானை, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை.

கழகத் தமிழ் அகராதி,(2004), கழக வெளியீடு,ப.254.

சடகோபன் முத்து சீனிவாசன்.,(மொழிபெயர்ப்பு),(2003), வேதார்த்தசங்கிரகம், ஸ்ரீசெண்பகா பதிப்பகம் சென்னை.

சுஜாதா.,(2009), ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், விசா பப்ளிக்கேசன், சென்னை.

பசாம்.A.L., (1963), வியத்தகு இந்தியா,அரசகருமமொழி திணைக்கள வெளியீடு, ப.421

புலியூர்க்கேசிகன்.,(உரை), (2015), சிலப்பதிகாரம், பாரதி பதிப்பகம்.

நடராசா.எப்.எக்ஸ்.சி.,(பதி) ,(1998),மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை. ப 91.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், (2005), லிப்கோ பதிப்பகம்,சென்னை.

மௌனகுரு,சி.,(பதி),(2003), மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு, 2ஆம் உலக இந்துமாநாடு-மட்டக்களப்புப் பிரதேசக் கிளை.

வித்தியானந்தன்,சு., (பதி),(1970), கஞ்சன் அம்மானை, றோயல் அச்சகம், கண்டி.

வேணு சீனிவாசன், (2012), ஸ்ரீ வைஷ்ணவம், கிழக்கு பதிப்பகம், சென்னை.